செய்தி வெளியீடு எண்: 540 நாள் : 28.10.2015

# பத்திரிக்கை செய்தி

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு இரா. காமராஜ் அவர்கள் தலைமையில், பருப்பு வணிகர்கள் உடனான கலந்தாய்வுக் கூட்டம் இன்று (28.10.2015) சென்னை, சேப்பாக்கம் எழிலகத்தில் நடைபெற்றது.

பெரும்பான்மையாக பருப்பு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் பருவமழை பொய்த்த காரணத்தால், சாகுபடி பரப்பளவும், உற்பத்தியும் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், பருப்பு வகைகளின் விலை இந்தியா முழுவதும் உயர்ந்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு இவ்விலையேற்றத்தின் பாதிப்பு ஏற்படாதவண்ணம் குறைந்த விலையில் கிடைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழகம் முழுவதுமுள்ள 34 ஆயிரத்து 352 நியாய விலை அங்காடிகள் மூலம், குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ உளுத்தம் பருப்பு ஆகியன ரூபாய் 30 என்ற விலையிலும், பாமாயில் ஒரு லிட்டர் பாக்கெட் ரூபாய் 25 என்ற விலையிலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன்படி, ஒவ்வொரு மாதமும் 13 ஆயிரத்து 461 மெ.டன் துவரம் பருப்பு, 7 ஆயிரம் மெ.டன் உளுத்தம் பருப்பு, 1 கோடியே 50 இலட்சம் பாக்கெட் பாமாயில் ஆகியன ஒதுக்கீடு செய்யப்பட்டு, சராசரியாக 98 சதவீதம் நுகர்வு செய்யப்படுகிறது. இப்பொருட்கள் வழங்கப்படும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கான மானியத்தை முந்தைய மத்திய அரசு 30.06.2012 உடன் நிறுத்திவிட்ட போதிலும், இதனால் ஏற்படும் மானியச்சுமை சுமார் 1,400 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசே ஏற்றுக்கொண்டு இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தி வரும் இத்திட்டங்களை பின்பற்றி ஆந்திரா, தெலுங்கானா போன்ற மாநிலங்களில் துவரம் பருப்பு கிலோ ரூபாய் 40க்கும், அரியானாவில் ஒரு கிலோ ரூபாய் 50க்கும் நியாய விலை அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

01.11.2015 முதல் சென்னை, கோவை, திருச்சி, மதுரை உள்ளிட்ட நகரங்களில் கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பல்பொருள் விற்பனை அங்காடிகள் மூலம் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூபாய் 110 என்ற விலையிலும், அரை கிலோ ரூபாய் 55 என்ற விலையிலும் விற்பனை செய்யப்படும் என மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதன்படி, 91 அங்காடிகள் மூலம்

விற்பனை செய்ய அங்காடிகளுக்கு துவரம் பருப்பு நகர்வு செய்யப்பட்டு வருகிறது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயிகளுக்கு அளித்துவரும் பல்வேறு சலுகைகளின் பயனாக, தமிழ்நாட்டில் துவரை சாகுபடி செய்யும் நிலப்பரப்பு உயர்ந்துள்ளது என்றும், இதற்கென ஒரு இயக்கம் செயல்படுத்தப்படும், துவரை சாகுபடி அதிகரிக்க பல்வேறு உத்திகள் கடைபிடிக்கப்படும் என்றும் மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் பருப்பு தேவைக்கு தன்னிறைவு ஏற்படும் நிலை உருவாகுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பொருள்கள் பதுக்கப்படுவது மற்றும் கடத்தப்படுவது, மாண்புமிகு அம்மா அவர்களின் தொடர் நடவடிக்கைகளால் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பருப்பு மொத்த வணிகர்களுக்கு மாநகராட்சி பகுதிகளில் 2500 குவிண்டால் என்றும், சில்லரை வணிகர்களுக்கு 62.5 குவிண்டால் என்ற அளவிலும் பருப்பு இருப்பு வைத்துக்கொள்ள (Stock Holding Limit) அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதர பகுதிகளில் முறையே 1250 குவிண்டால் மற்றும் 50 குவிண்டால் என்ற அளவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த அளவு அனைத்து வகை பருப்புகளையும் உள்ளடக்கிய மொத்த அளவாகும்.

பருப்பு வணிகர்கள், அனுமதிக்கப்பட்டுள்ள அளவில் மட்டும் பருப்பு இருப்பு வைத்து, விலை உயர்வின்றி, விநியோகம் செய்ய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு மாண்புமிகு அமைச்சர் கேட்டுக் கொண்டார். அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தருவதாக பருப்பு வணிகர்கள் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலாளர் திரு.சிவ்தாஸ்மீனா, இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப., உணவு பொருள் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் திரு.கே.இராதாகிருஷ்ணன், இ.கா.ப., மற்றும் பருப்பு வணிகர்கள் கலந்து கொண்டனர்.

**Principal Secretary**
**Co-op.,Food and CP.**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**